பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 10 திங்கட்கிழமை 27.10.2025 | அதிர்வு 88

# வலுப்பெறும் மொந்தா புயல்

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

வடக்கு, வடமத்திய, மேல், சபரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களி லும் காலி மற்றும் மாத்தறை 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செவ்வந்திக்கு உதவிய யாழ். ஆனந்தனின் வீட்டில் இருந்து துப்பாக்கிகள் கைப்பற்றல்!

## தொடர்கின்றது தீவிர விசாரணை

பாதாள உலகக் குழு உறுப்பி னர் ‘கணேமுல்ல சஞ்சீவ’ படு கொலையுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்திக்கு இந்தி யாவுக்குத் தப்பிச் செல்ல படகு ஏற்பாடு செய்து கொடுத்து உதவி யமை தொடர்பில் கைது செய்யப் பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 04▶

# உலகில் சுற்றுலாவிகள் பார்வையிடக்கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம்

2026 ஆம் ஆண்டில் உலகில் பார்வை யிடக்கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் பெயரிடப்பட்டுள்ளது.

உலகளாவிய பயண ஊடக நிறுவன மான லோன்ஸி பிளேனட் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது.

அத்துடன், இது தனித்துவமான கலா சார பாரம்பரியத்தைக் கொண்ட இடமாக அமைந்துள்ளமையால், உலகளாவிய ஈர்ப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள் ளது.

லோன்லி பிளானட்டின் ‘சிறந்த பய ணம் 2026’இன் இத்தாலிய மொழி பதிப்பு கடந்த 22 ஆம் திகதி வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் 04▶



## வெலிகம தவிசாளர் படுகொலை:

# பிரதான சந்தேகநபரை பகிரங்கமாக விசாரணை செய்தமைக்குக் கண்டனம்





வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரைப் பகிரங்கமாக விசாரணை செய்தமை தொடர்பில் முன்னாள் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிதாரியான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டவுடனேயே பொலிஸ் அதிகாரிகள் அவரை விசாரிக்கும் காணொளி சமூக ஊடகங்களில் பரவியதைத் தொடர்ந்தே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கைது மற்றும் குற்றப் புலன் விசாரணைகள் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாகவே நடத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

“சந்தேகநபர்களை ஊடகங்களின் முன் நிறுத்துவது, அவர்களை வாக்குமூலங்களை வழங்கச் செய்வது மற்றும் அத்தகைய காட்சிகளைப் பரப்புவது பொதுமக்களின் ஒரு பிரிவினருக்கு உற்சாகத்தை அளிக்கலாம். ஆனால், இந்த நடவடிக்கைகள் வழக்கு விசாரணை ஆரம்பமானதுடன் இறுதியில் அரசுத் தரப்புக்குப் பாதகமாக அமையும்.” – என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

“இந்தச் சிறுபிள்ளைத்தனமான செயல்கள் பொலிஸாரின் பிம்பத்தை மேம்படுத்தாது மாறாக, அவை எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். இது புலனாய்வாளர்களின் நிபுணத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்குவதுடன், முழு அமைப்புக்கும் இழிவு தேடித் தரும்.” – என்றும் அவர் கூறியுள்ளார்.

நீதியை உறுதிப்படுத்தவும், சட்டம் மற்றும் அமுலாக்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணவும், உரிய நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதும், விசாரணைகளின் நேர்மையைப் பேணுவதும் மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# பல்லேகலே சிறையில் இருந்து கைதிகள் இருவர் தப்பியோட்டம்

பல்லேகலே திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பு – 05 பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய கைதி ஒருவரும், கொழும்பு – 15 பகுதியைச் சேர்ந்த கைதி ஒருவருமே தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இரண்டு கைதிகளும் சிறைச்சாலையின் சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்துக்கொண்டிருக்கும் போது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற கைதிகளைத் தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல்லேகலே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு விரைவில் வாக்குரிமை

## அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு





எதிர்காலத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் கீழ் ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 40 ஆவது வருட நிறைவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் வாக்களிக்கத் தேவையான வசதிகளை வழங்கவும், தேவையான சட்ட நிலைமைகளை உருவாக்கவும் பொது நிர்வாக அமைச்சு ஏற்கனவே விசேட குழுவை நியமித்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் பங்களிப்பு ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்தத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.” – என்றார்.

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார்!

## சஜித் அணி எம்.பி. ஜகத் விதான அறிவிப்பு



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தனக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறி, பொலிஸ்மா அதிபர் சி.டி.பிரியந்த வீரசூரிய கூறியமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எனக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசியல் உள்நோக்கம் கொண்டது அல்ல. மாறாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடனான எனது தொடர்பு காரணமாக ஏற்பட்டது என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.பிரியந்த வீரசூரிய அண்மையில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூற்று ஆதாரமற்றது. இது எனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கம் கொண்டது.

எனக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவுடன் எந்தத் தொடர்பும் இல்லை. நான் 1989 ஆம் ஆண்டு முதல் சட்டபூர்வமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றேன். எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையிலும் நான் ஒருபோதும் ஈடுபட்டதில்லை.

இந்த வார ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் அச்சுறுத்தல் குறித்து நான் கவலை தெரிவித்ததன் பின்னர், சபாநாயகரின் தலையீட்டின் மூலம் எனக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதில் பொலிஸ்மா அதிபர் கோபமடைந்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர், எனக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கும் இடையில் பகைமையை உருவாக்க முயற்சிக்கின்றார். இதன் மூலம் எனது உயிருக்கு அதிக ஆபத்து ஏற்படுகின்றது.

இந்தப் பொறுப்பற்ற மற்றும் தீங்கிழைக்கும் கருத்துக்களுக்காகப் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுப்பேன்.” – என்றார்.

# இந்த வருடத்தில் இதுவரை 2,097 ஆயுதங்கள் சிக்கின!



2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையில் 2 ஆயிரத்து 97 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, ரி – 56 ரக துப்பாக்கிகள் 67, கைத்துப்பாக்கிகள் 73, ரிவால்வர் ரக துப்பாக்கிகள் 50 மற்றும் 1,907 ஏனைய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### செவ்வந்திக்கு...

'யாழ். ஆனந்தன்" என்பவரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளனர் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள "யாழ். ஆனந்தன்" என்பவர் வழங்கிய தகவலுக்கமைய யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிஸ்டல் ரக துப்பாக்கிகள் இரண்டும், 9 மி.மீ ரக தோட்டாக்கள் ஆறு உள்ளிட்ட ஆயுதங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

அத்துடன், 'யாழ். ஆனந்தன்' என்பவருக்குத் துப்பாக்கியைக் கொடுத்தார் எனக் கூறப்படும் நபர் ஒருவரும் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் நேபாளத்தில் வைத்து இந்த மாதம் கைது செய்யப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இஷாரா செவ்வந்தி வழங்கிய தகவலுக்கமைய இந்தியாவுக்குத் தப்பிச் செல்லப் படகு ஏற்பாடு செய்து கொடுத்து உதவிய 'யாழ். ஆனந்தன்' என்பவர் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உலகில்...

இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தனித்துவமான அங்கீகாரம் இலங்கையின் சர்வதேச ஈர்ப்பை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், சுற்றுலாத்துறையில் சமூக அடிப்படையிலான சுற்றுலா அனுபவங்களை ஊக்குவிக்கவும் ஒரு சக்தி வாய்ந்த சந்தைப்படுத்தல் கருவியாகச் செயற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### வலுப்பெறும்...

மாவட்டங்களிலும் இன்று மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், மேல், சபரகமுவ, மத்திய, தென், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணிக்கு சுமார் 50 – 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இந்தநிலையில், காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலை வழியாக மட்டக்களப்பு வரையிலான கடற்கரைக்கு அப்பால் உள்ள ஆழமற்ற கடல் பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதை மறு அறிவித்தல் வரும் வரை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வங்கக்கடலில் உருவாகி நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று அதிகாலை 2.30 மணியளவில் புயலாக வலுப்பெற்றது.

'மொந்தா' புயல் நாளை காலை சூறாவளியாக வலுப்பெற்று, மாலையில் ஆந்திரப் பிரதேச கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'மொந்தா' புயல் காரணமாக இந்தியாவின் தமிழ்நாட்டில் இன்று பலத்த மழை பெய்யும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# ரவிகரன் எம்.பி. – ஆளுநர் வேதநாயகன் சந்திப்பு!

**(விஜயரத்தினம் சரவணன்)**

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு ஒன்று இன்று (27) இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட வன்னிப் பிராந்தியத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் ஆளுநர் வேதநாயகனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அத்தோடு வன்னியில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினரால் அளுநரிடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# புல்மோட்டை ஊழியர்கள் 83 பேருக்கு 15 மாதங்களாக ஊதியம் இல்லை!

## 14 ஆவது நாளாகத் தொடர் சத்தியாக் கிரக போராட்டம்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை புல்மோட்டை கனிய மணல் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றிவரும் 83 ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து தொடர்ச்சியாக இன்று (27) திங்கட்கிழமை 14 ஆவது நாளாக சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 15 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாமையால் பெரிதும் பொருளாதார ரீதியாக தங்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டும் பாடசாலை பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டும் உள்ளன என்று தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய துறைசார் அமைச்சர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். தங்களுக்கு சாதகமான தீர்வை பெற்றுத் தரக் கோரி சத்தியாக் கிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

"பல மில்லியன் டொலர்களை உருவாக்கும் எல்.எம்.எஸ்.எல். நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இன்னும் ஊதியம் வழங்காமல் மறுக்கப்படுவது ஏன்?, ஜனாதிபதி அவர்களே இது உங்களின் கவனத்துக்கு" போன்ற சூலோகங்களை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நமது கருத்து

# சிறுபிள்ளைத்தனம்

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தடுமாறும் அரசாங்கம், அதனால் ஏற்படும் அரசியல் பின்னடைவுகள், செல்வாக்கு இழப்புக்கள் போன்றவற்றைச் சமாளிப்பதற்காக நாட்டில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் விடயத்தில் குறுகிய அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றது.

குற்றச் சம்பவங்கள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் 'சாதனை மிக்க' அரசாங்கம் என்று மக்களுக்குப் படம் காட்டுவதற்காக இத்தகைய குற்றச் சம்பவங்கள் தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் முறையற்ற விதத்தில் - சட்ட நடைமுறைகளை மீறி - அது நடந்து கொள்வதாக குற்றஞ் சாட்டப்படுகின்றது.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லஸந்த விக்கிரமசேகர கொலைச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டை நடதியவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை பகிரங்கமாக விசாரித்து, நேற்று பொலிஸார் நடத்திய 'படப்பிடிப்பு' நடவடிக்கைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் கடுமையாக விமர்சித்திருக்கின்றார்.

கைது செய்யப்பட்ட உடனேயே சந்தேக நபரை பொலிஸ் அதிகாரிகள் பகிரங்கமாக விசாரிப்பதைக் காட்டும் வீடியோ - ஒளி, ஒலி வடிவில் - சமூக ஊடகங்களில் வைரலானதைத் தொடர்ந்து சாலிய பீரிஸ் இந்தக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

கைதுகள் மற்றும் குற்றவியல் விசாரணைகள் சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் என்றும் பீரிஸ் கூறினார்.

சந்தேக நபர்களை கைது செய்யும் சமயங்களில் ஊடகங்களுக்கு முன் அணிவகுக்கச் செய்வது, அவர்களை ஊடகங்களுக்கு முன்னால் அறிக்கைகளையும் கருத்துகளையும் வெளியிட வைப்பது மற்றும் அத்தகைய காட்சிகளை பரப்புவது பொதுமக்களின் சில பிரிவுகளை உடனடியாக உற்சாகப்படுத்த - உணர்ச்சியூட்ட - உதவக் கூடும். ஆனால் இறுதியில் விசாரணை தொடங்கியதும் இவ்விடயம் தொடர்பான வழக்குத் தொடரலுக்கு அது தீங்கு விளைவிக்கும் என்று அவர் எச்சரித்தார்.

“இந்த குழந்தைத்தனமான செயல்கள் பொலிஸாரின் பிம்பத்தை மேம்படுத்தா. அவை எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். இந்தப் போக்கு புலனாய்வாளர்களின் தொழில் முறைத்தன்மையை - நிபுணத்துவத்தை - கேள்விக்குள்ளாக்குகிறது. அத்தோடு முழு பொலிஸ் துறைக்கும் அவப்பெயரை ஏற்படுத்துகிறது” என்று அவர் மேலும் கூறினார்.

நீதியை உறுதி செய்வதற்கும் சட்ட அமலாக்கத்தில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும் உரிய செயல்முறையைப் பின்பற்றுவதும் விசாரணைகளில் நேர்மையைப் பேணுவதும் மிக முக்கியமானவை என்று பீரிஸ் வலியுறுத்தியிருக்கின்றார்.

நீதி செய்யப்படுவது மாத்திரமன்றி நீதி செய்யப்படுவதாக வெளிப்படையாக வெளிப்படுத்தப்படவும் வேண்டும். அதற்காக குற்றமிழைத்த தரப்புகளை பகிரங்க விசாரணை நடத்தி குறுக்கு வழியில் செல்வாக்குத் தேட முயலக் கூடாது.

# சுற்றுலாத் துறை ஓட்டோ சாரதிகளுக்கு பயிற்சி!



**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறையில் பணிபுரியும் ஓட்டோ சாரதிகள் நெறிமுறைகள் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக மனப்பான்மை மேம்பாட்டுப் பயிற்சி கிழக்கு மாகாண ஆளுனர் தலைமையில் இடம்பெற்றது.

சுற்றுலாப் பயணிகளுக்கு நட்பு மற்றும் பாதுகாப்பான சேவையை வழங்கும் நோக்கில், 2025 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கிய மாகாண மட்டத்தில் தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்களை கிளீன் ஸ்ரீலங்கா செயலகம் ஏற்பாடு செய்துள்ளது. கிழக்கு மாகாணபயிற்சித்திட்டத்தொடரின்தொடக்க நிகழ்ச்சி கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவின் தலைமையில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் கேட்போர் கூடத்தில் இன்று (27) நடைபெற்றது.

சுற்றுலாத் துறையில் பணிபுரியும் ஓட்டோ சாரதிகளது தொழில்முறை தரம் மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கு நட்பு, நம்பகமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து சேவைகளை வழங்குவதை உறுதி செய்தல், மோசமான தரமற்ற சேவைகள் காரணமாக இலங்கையில் சுற்றுலாத் துறையில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைத்தல் மற்றும் கிளீன் ஸ்ரீங்கா திட்டத்தின் கீழ் சமூகத்திலும் சுற்றுலா சேவை வழங்கலிலும் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குதல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

அதன்படி, திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பப் பயிற்சி தொடங்கியது. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா தலங்களைக் கொண்ட இடங்களில் ஓட்டோ வேலைகளில் பணிபுரியும் ஆண்களுக்காக இதுபோன்ற 11 பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நாமல் தலங்கம, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் முகமது பைசல், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பிரியந்த மாலவென்ன, கிழக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் கித்சிறி நவரட்ண மற்றும் பிற அதிகாரிகள், திருகோணமலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர், பாதுகாப்புப் படையினர் மற்றும் திருகோணமலை ஓட்டோ சங்க உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# சப்ரகமுவ மாகாண தீபாவளி விழா!

**(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)**

சப்ரகமுவ மாகாண சபையின் கல்வி கலாசார மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையில் பெருந் தோட்ட, சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் ஆலோசனைக்கமைய சப்ரகமுவ மாகாண தீபாவளி விழா இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன கீழ்ப் பிரிவு தோட்டத்தில் உள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் முன்றலில் நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் அதிதிகள் ஊர்வலமாக கலைமகள் வித்தியாலய முச்சந்தியில் இருந்து அழைத்து வரப்பட்டனர். அதன் பின்னர் ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் மதவிவகார மற்றும் கலாச்சார அமைச்சர் இனிதும சுனில் செனவி.பெருந்தோட்ட. சமுக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் செயலாளர் சுனீதா எதரிசிங்க, கல்வி அமைச்சின் பணிப்பாளர் குமாரகே, மாகாண சபை மற்றும் இரத்தினபுரி பிரதேச செயலக அரச ஊழியர்கள், பிரதேச தமிழ் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்ற இந்த தீபாவளி விழாவில் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்













# குஞ்சுப்பரந்தன், தட்டுவன்கொட்டி, பன்னங்கண்டி பகுதிகளில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு!

## அமைச்சர் சந்திரசேகரன், இளங்குமரன் எம்.பி. ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டும் நடவடிக்கை இல்லை என்று மக்கள் குற்றச்சாட்டு





கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன், தட்டுவன்கொட்டி, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் பொலிஸாரின் துணையுடன் நாளந்தம் சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலை தொடர்வதால் பல கிராம மக்கள் குடி பெயரும் நிலை ஏற்படும் என்று பல்வேறு பொது அமைப்புக்களும் குறிப்பிட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவது தொடர்பில் தொடர்ச்சியான முறைப்பாடுகள் செய்ப்பட்டு வருகின்றன.

மாவட்ட உயர்மட்ட அரச அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றுக்குப் பிரதேச பொது அமைப்புகள் தொடர்சியாக முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்றன.

இந்த நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் குஞ்சுப்பரந்தன் கல்லாறு ஆகிய பகுதிகளுக்கு அண்மையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினுடைய தலைவரும் கடத்தொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் நேரடியாக சென்றும் பார்வையிட்டு இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

ஆனாலும் இது தொடர்பில் எந்த விதமான முன்னேற்றங்களும் இதுவரை ஏற்படவில்லை என்று பல்வெறு தரப்பிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தற்போது இரணைமடுக் குளத்தின் கீழான கனகராயன் ஆறு, பன்னங்கண்டி மற்றும் செருகன் கல்லாறு, தட்டுவன் கொட்டி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் அரசியல் பின்புலத்தை உடையவர்களால் கிளிநொச்சி – தருமபுரம், கிளிநொச்சி – பூனகரி ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் குறிப்பிட்ட சில பொலிஸ் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் குறிப்பிட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் துணையுடனே குறித்த இடங்களில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடரும் இயற்கை வளங்களை அழிப்பதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மணல் அகழ்வதற்கான அனுமதிகளோ அல்லது வழித்தட அனுமதிகளோ இல்லாத நிலையில் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வவுனியா கனகராயன்குளத்தில் மின்சாரம் தாக்கி யானை பலி!

(கி.வசந்தன்)

வவுனியா கனகராயகுளம் குறிசுட்ட குளம் பகுதியில் தோட்டக் காணி ஒன்றுக்கு போடப்பட்டிருந்த யானை வேலியில் பாய்ந்த மின்சாரம் தாக்கியதில் யானை ஒன்று பலியாகி உள்ளது.

இன்று காலை தோட்டத்திற்குச் சென்ற விவசாயி யானை ஒன்று இறந்து கிடந்ததை அவதானித்ததை அடுத்து அயலவர்களுக்கும் கனகராயன்குளம் பொலிஸாருக்கும் தகவலை வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் பார்வையிட்ட போது யானை இறந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் வன ஜீவ ராசிகள் திணைக்களத்தற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கனகராயன் குளம் பொலிஸார் மற்றும் வனஜீவ ராசிகள் திணைக்களத்தின் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலைய மாணவர் கவனவீர்ப்புப் போராட்டம்

(பூ.லின்ரன்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் உப அதிபர் இடம்மாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய அதிபர் ஓய்வு வயதையும் தாண்டி கடமையாற்றுகின்றார். இந்த நிலையில் துடிப்புடன் செயற்பட்ட எமது உப அதிபர் இடம்மாற்றம் செய்யப்பட்டமையானது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இடமாற்றத்தால் மாணர்களின் நலன் பாதிக்கும் எனவும் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.










# தென்னிந்திய திருச்சபையின் போட்டிகளில் முறிகண்டி திருச்சபைக்கு பல கிண்ணங்கள்!

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீன பிள்ளைகள் விழாவில் முறிகண்டி திருச்சபை பல கிண்ணங்களைத் தன தாக்கியது.

13 வயதுப் பிரிவு வேதாகம புதிர் போட்டியில் முறிகண்டி திருச்சபை, வட்டுக்கோட்டை திருச்சபையை 19 :04 எனும் புள்ளியில் வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி உசன் திருச்சபையுடன் போட்டியிட்டது.

இறுதிப் போட்டியில் 16:05 எனும் புள்ளியில் வெற்றி பெற்று முதல் இடத்தைப் பிடித்து கிண்ணத்தைத் தமதாக்கினர்.

இரண்டாம் இடத்தை உசன் திருச்சபையும், மூன்றாம் இடத்தை வட்டுக்கோட்டை திருச்சபையும் பெற்றன.

குழுப்பாடல் பாடல் போட்டியில் முதல் இரண்டு இடங்களையும் வட்டுக்கோட்டை திருச்சபையும், உடுவில் திருச்சபையும் பெற்றுக் கொண்டன. 3 ஆம் இடத்தை முறிகண்டி திருச்சபை பெற்றுக் கொண்டது.

மேலும் 19 வயதுப் பிரிவு தனிப் பாடல் போட்டியில் முதல் இடத்தை உடுவில் திருச்சபையும், 2 ஆம் 3 ஆம் இடங்களை முறிகண்டி திருச்சபையும் பெற்றன. 10 வயதுப் பிரிவில் 2 ஆம் இடத்தைப் பெற்று கிண்ணத்தை தன தாக்கியது.

பேச்சு போட்டியில் 2 ஆம் இடம் பெற்று கிண்ணத்தை சுவீகரித்ததுடன், சித்திரம் உள்ளிட்ட பல போட்டிகளிற்கான வெற்றிச் சான்றிதழ்களையும் முறிகண்டி திருச்சபை வென்றது.

வெற்றிக் கிண்ணங்களை பேராயர், உடுவில் மகளீர் கல்லூரி அதிபர் உள்ளிட்ட விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.











# அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு

(பூ.லின்ரன்)

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மேற்கத்திய வாத்தியங்கள் முழங்க, விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரைகள், கலை நிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன.

பாடசாலையின் முதல்வர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா கலந்து கொண்டார். விழாவில் ஏனைய விருந்தினர்கள், ஆசிரியர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர் கலந்து கொண்டனர்.







# சபை எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன்

(த.சுபேசன்)

சபை எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் சபை இருக்கும் போதோ அல்லது சபை கலைந்த பின்னரோ சபையின் செயலாளர் மீது எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்க முடியாது என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் கடந்த சபையில் (2023ஆம் ஆண்டு) சபைத் தீர்மானம் ஊடாக நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில், தற்போது வர்த்தக நிலையங்களை நடத்தும் வர்த்தகர்களிடம் இருந்து 10 வருட வாடகைப் பணத்தைப் பெற்று அவர்களுடைய பெயர்களுக்கே பெயர் மாற்றிக் கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானத்துக்கு அப்போதைய சபையின் செயலாளர் உடன்படாத போதிலும் சபை உறுப்பினர்கள் 18பேரும் இது தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் சபையே பொறுப்பு எனக் கையொப்பமிட்டு மேற்படி தீர்மானத்தை நடைமுறைப் படுத்தியிருந்தோம்.

ஆனால் தற்போது 20 வருட வாடகைப் பணத்தைப் பெற்று கடைகளைப் பெயர் மாற்றம் செய்ய வேண்டிய நிலையில், 10 வருட வாடகைப் பணத்தை மாத்திரம் பெற்று பெயர் மாற்றம் செய்ய முயற்சித்த காரணத்தால் அப்போதைய சபையின் செயலாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சபை எடுக்கும் தீர்மானத்துக்குச் செயலாளர் எவ்வாறு பொறுப்பாளி ஆக முடியும். எனவே மேற்படி வர்த்தக நிலைய பெயர் மாற்ற விடயத்தில் அப்போதைய செயலாளரை பலிக்கடா ஆக்குவது பொருத்தமற்றது.- என்றார்.

# லிந்துல்ல நாகசேனை பகுதியில் வலையில் சிக்கிய சிறுத்தை மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்)

லிந்துல்ல நாகசேனை பகுதியில் வலையில் சிக்கிய சிறுத்தை உயிருடன் மீட்கப் பட்டது.

இந்தச் சம்பவம் இன்று காலை 10.30 மணிக்கு லிந்துல்ல பத்தனை பொலிஸ் பிரிவில் உள்ள நாகசேனை டிரிகுள்ரி பகுதியில் விவசாய நிலத்தில் இடம்பெற்றது.

விவசாய நிலத்தை ஏனைய மிருகங்கள் நாசபடுத்துவதால் அவற்றுக்கு விரித்த வலையில் இந்தச் சிறுத்தை சிக்கியுள்ளது.

இதைக் கண்ட தேட்ட மக்கள் லிந்துல பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குத் தகவல் வழங்கினர். லிந்துல பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நுவரெலியா வனஜீவராசி அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கி நுவரெலியா வனஜீவராசி அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சிறுத்தையை உயிருடன் மீட்டனர்.



# மட்டக்களப்பு கடற்பகுதியில் நண்டுகள் கரையொதுங்குவது தொடர்பில் கவனம்!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதியில் நண்டுகள் கரையொதுங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில கடற்பகுதிகளில் இவ்வாறு நண்டுகள் கரையொதுங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிகுடி, களுதாவளை, தேற்றாத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள கடற்பகுதிகளில் இவ்வாறு நண்டுகள் கரையொதுங்கிவருகின்றன.

சிறிய அளவிலான நண்டுகளே இவ்வாறு கரையொதுங்கி வருகின்றன என்றும் காலநிலை மாற்றங்களால் இவ்வாறு நண்டுகள் கரையொதுங்குகின்றன என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். கடலில் ஏற்படும் மாற்றங்களாலும் இவ்வாறு நடக்கும் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் விசேட நிகழ்வுகள்











(எம்.ஏ.றமீஸ்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட நிகழ்வுகள் இன்று (27) இடம்பெற்றன.

அதிபர் ஏ.எல்.நசீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எம்.ஐ.எம்.ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். துறைசார் முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாளர்கள், நூலக உதவியாளர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் பெருந்தொகையான மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. இவ்விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலை வளாகத்தில் இருந்து ஆரம்பித்து அக்கரைப்பற்று நகரின் பல்வேறு பகுதிகளின் வீதிகள் ஊடாக இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது வாசிப்பின் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் போன்றன மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. இதுதவிர ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் அக்கரைப்பற்று மாநகர நூலகத்துக்குச் சென்று நூலக நடவடிக்கைகள் தொடர்பில் பார்வையிட்டனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய சேவை நிலையமான பிறை எப்.எம். வானொலி நிலையத்துக்கும் சென்று அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

# ‘மோந்தா’ தீவிரப் புயலாக வலுப்பெறும்: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்






தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் ‘மோந்தா’ புயல் நாளை காலை தீவிரப் புயலாக வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

வங்கக்கடலில் கடந்த 24 ஆம் திகதி காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இது தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் என்ற நிலைகளைக் கடந்து, தற்போது புயலாக வலுவடைந்துள்ளது. இந்தப் புயலுக்கு ‘மோந்தா’ என்ற பெயரை தாய்லாந்து நாடு வழங்கியுள்ளது. ‘மோந்தா’ என்றால் அழகிய, நறுமணம் மிக்க மலர் என்று அர்த்தமாம். நடப்பாண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் ‘மோந்தா’ முதல் புயல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இது தொடர்பாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தரப்பில் இன்று அதிகாலை வெளியிடப்பட்ட வானிலை முன்னறிவிப்பில்,

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவும் ‘மோந்தா’ புயல் ஒக்.28ஆம் திகதி காலை தீவிரப் புயலாக வலுப்பெறக்கூடும். தற்போதைய நிலைவரப்படி மணிக்கு 16 கி.மீ. வேகத்தில் வடமேற்கு திசையில் இந்தப் புயல் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இது மேலும், வடமேற்கு திசையிலேயே நகர்ந்து அடுத்த 12 மணி நேரத்தில் வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து ஒக்டோபர் 28 காலையில் தீவிரப் புயலாக வலுப்பெறும். நாளை மாலை ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே கரையைக் கடக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவிரப் புயல் எச்சரிக்கையை ஒட்டி ஆந்திர மாநில அரசு ஸ்ரீகாகுளம், விஜியநகரம் மாவட்டங்களில் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முந்தைய புயல்களில் இந்த இரு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதைக் கணக்கில் கொண்டு கூடுதல் முன்னெச்சரிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த தீவிரப் புடல் காக்கிநாடா அருகே மச்சிலிபட்டினம் - கலிங்கபட்டினம் இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய புயல்களான லைலா, பைலின், ஆகியவை ஸ்ரீகாகுளத்தில் ஏற்படுத்திய சேதாரத்தின் அடிப்படையில் முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆந்திர முதல்வர் சந்திரபாப்பு நாயுடு அதிகாரிகளுக்கு புயல் முன்னேற்பாடுகளை சிறப்பாகச் செய்யும்படி பணித்துள்ளார்.

ஸ்ரீகாகுள மாவட்டத்தைப் பொறுத்தவரை பைதிபீமாவரம் முதல் இச்சாபுரம் வரை 185 கிலோ மீற்றர் தூரத்துக்கு கடற்கரை பகுதியாக உள்ளது. இதனால் அங்கு கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ‘மோந்தா’ புயல் காரணமாக ஏற்கெனவே ஆந்திராவில் பரவலாக மழை பெய்துவருகிறது. ஆந்திராவின் 26 மாவட்டங்களில் 23 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

மோந்தா புயல் தீவிரமடைந்து ஆந்திராவில் தான் கரையைக் கடக்கும் என்று இப்போதைக்கு கணிக்கப்பட்டிருந்தாலும் கூட, ஒடிசாவின் கிழக்குப் பகுதியில் 15 மாவட்டங்களில் உஷார் நிலைக்கு தயாராகி வருகிறது. இதில் 8 மாவட்டங்களில் மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். நேற்று பிற்பகல் முதலே மக்களை அப்புறப்படுத்தும் பணிகள் தொடங்கிவிட்டன. புயல் பாதிப்பு இருக்கக் கூடிய பகுதிகளில் என்.டி.ஆர்.எ:.ப் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை மீட்புக் குழுவினர் தயார் நிலையில் உள்ளனர். மல்கான்கிரி, கோராபுட், நாபாரங்பூர், ராயகடா, கஜபதி, கஞ்சம், காந்தமால், காலாஹண்டி மாவட்டங்கள் தீவிர கண்காணிப்பில் உள்ளன.

## விஜய்யுடன் இன்று மாமல்லபுரத்தில் சந்திப்பு:

# கரூரில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை பஸ்ஸில் அழைத்து சென்ற த.வெ.கவினர்

கரூரில் த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரத்தில் இன்று கட்சித் தலைவர் விஜய் சந்தித்து ஆறுதல் கூறுகிறார். இதையடுத்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை கரூரில் இருந்து சென்னைக்கு பஸ்ஸில் த.வெ.கவினர் நேற்று அழைத்துச் சென்றனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் டைபெற்ற தவெக பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை கடந்த 3, 4 ஆம் திகதிகளில் கட்சி நிர்வாகிகள் சந்தித்து ஆறுதல் கூறினர். இதற்கிடையில், உயிரிழந்தோர் குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகளில் தவெக சார்பில் தலா 20 லட்சம் இந்திய ரூபா இழப்பீட்டுத் தொகை கடந்த 18 ஆம் திகதி வரவு வைக்கப்பட்டது.

இதற்கிடையில், கரூருக்கு விஜய் வருவதில் சிக்கல் நீடித்ததால், உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை மாமல்லபுரத்துக்கு வரவழைத்து சந்திக்க விஜய் முடிவு செய்தார். இதற்காக, பாதிக்கப்பட்டோரை த.வெ.க. நிர்வாகிகள் சில நாள்களுக்கு முன்பு தொலைபேசியிலும், நேரிலும் தொடர்பு கொண்டு விவரங்களை கூறி, அவர்களின் கருத்துகளை கேட்டறிந்தனர்.




இதையடுத்து, கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் 33 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை கரூரில் இருந்து சென்னைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு நடைபெற்று வந்தது. கரூர் வெண்ணெய்மலையில் இருந்து உயிரிழந்தவர்களின் 30 குடும்பங்களைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்டோரை 5 பஸ்களில் மூலம் சென்னைக்கு த.வெ.கவினர் நேற்று அழைத்துச் சென்றனர்.

பாதிக்கப்பட்ட 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் செல்லவில்லை. முன்னதாக, கரூர் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், அவரவர் குடியிருக்கும் பகுதிகளில் இருந்து பஸ்கள் நின்ற வெண்ணெய்மலை பகுதிக்கு த.வெ.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கார்கள், மினி வான்கள் மூலம் அழைத்து வரப்பட்டனர். சென்னைக்கு புறப்பட்ட 5 பஸ்களுடன், 2 நோயாளர்காவுவண்டிகள், ஒய்வு பெற்ற டி.எஸ்.பி. தலைமையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் த.வெ.க. நிர்வாகிகளும் சென்றனர்.

# காஸா மீது தாக்குதல் நடத்துவதற்கு எவரது ஒப்புதலும் தேவையில்லை

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை

காஸா அல்லது லெபனான் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேலுக்கு எவர் ஒப்புதலும் தேவையில்லை என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காஸாவிலும் லெபனான் தொடர்பில் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருக்கும் நிலையிலும் தாக்குதல் நீடிப்பது குறித்து எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நெதன்யாகு கருத்து தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடு என குறிப்பிட்டுள்ள நெதன்யாகு, நாங்கள் எங்கள் சொந்த முடிவுகளால் எங்களைப் பாதுகாத்துக் கொள்வோம், எங்கள் தலைவிதியை நாங்களே தொடர்ந்து தீர்மானிப்போம் என்றார்.



இதற்காக நாங்கள் யாருடைய ஒப்புதலையும் பெறப்போவதில்லை. எங்கள் பாதுகாப்பை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம் என்றார்.

ஆனால், காஸா மீதான இஸ்ரேலின் கொடூர தாக்குதல்களுக்கு மட்டுமின்றி, இஸ்ரேலின் இதுவரையான அனைத்து இராணுவ நடவடிக்கைகளிலும் அமெரிக்கா தனது முழு ஆதரவையும் அளித்து வந்துள்ளது.

வளைகுடா நாடான கட்டார் மீதான இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலை அடுத்து, அமெரிக்கா கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லை என்பதுடன், இனி அவ்வாறு நடக்காது என்று மட்டும் அறிவித்தது.

ஆனால், கட்டார் மீது ஈரான் நடத்திய தாக்குதலை அமெரிக்கா கடுமையாக கண்டித்ததுடன், பதிலடி உறுதி என்றும் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையிலேயே, இஸ்ரேலின் எதிரிகள் மீது தாக்குதல் நடத்த ஒப்புதல் தேவை இல்லை என அமைச்சர்கள் கூட்டம் ஒன்றில் நெதன்யாகு பேசியுள்ளார்.

# லூவர் அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் இருவர் கைது




கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிஸில் உள்ள உலகின் அதிகம் பார்வையிடப்படும் லூவர் அருங்காட்சியகத்தில் நடந்த நகைகள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக, இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்த நாட்டு நேரப்படி இரவு 10 மணியளவில் பாரிஸ்-சார்லஸ் டி கோல் விமான நிலையத்தில் வெளிநாடொன்றுக்கு செல்ல விமானத்தில் ஏறவிருந்த நிலையில் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இரண்டாவதாக, சிறிது நேரத்திலேயே பாரிஸ் பிராந்தியத்தில் மற்றொரு நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கின் விசாரணையை, உயர்மட்ட கொள்ளைச் சம்பவங்களைக் கையாளும் பாரிஸ் பொலிஸ் விசேட பிரிவு விசாரித்து வந்தது.

இந்தத் துணிகரத் திருட்டு, அருங்காட்சியகம் திறந்திருந்த நேரத்தில் நடந்தது.திருடர்கள் கிரேன் ஒன்றைய பயன்படுத்தி மாடியிலுள்ள ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்து, சுமார் பல மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்ட எட்டு நகைகளைத் திருடிய பின்னர், மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

திருடர்கள் கட்டுமான தொழிலாளர்கள் பயன்படுத்தும் உடையில் இருந்ததோடு, ஒரு ஹைட்ராலிக் லிஃப்டைப் பயன்படுத்தித் தப்பிச் சென்றமை சி.சி.டி.வி. காட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திருடப்பட்ட நகைகள், பிரான்சின் ராணிகள் மற்றும் பேரரசிகளுக்குச் சொந்தமான, இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டவை என தெரிவிக்கப்படுகிறது.

இதில் பேரரசி யூஜெனிக்குச் சொந்தமான கிரீடம் மற்றும் முடி அலங்கார நகைகள், பேரரசி மேரி லூயிஸுக்கு திருமணப் பரிசாக வழங்கப்பட்ட நீலக் கற்கள் பதித்த அட்டிகை மற்றும் காதணிகள் ஆகியவை அடங்குகின்றன.

இவற்றின் மதிப்பைவிட, இவற்றின் "பாரம்பரிய மதிப்பு விலைமதிப்பற்றது" என்று பிரான்ஸ் கலாசார அமைச்சு தெரிவித்துள்ளது.

கனடா முரசு
திங்கட்கிழமை 27/10/2025

## மீளப் பெறப்படுகின்ற போர்ஸே வாகனங்கள்

கனடாவில் போர்ஸே நிறுவனம் மொத்தம் 3,211 வாகனங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

கனடாவின் போக்குவரத்து அமைச்சு இது தொடர் 02







# கியுபெக் மாகாணத்தை தனி நாடாக்கக் கோரி மொன்ட்ரியால் நகரில் பொதுமக்கள் பேரணி

கனடாவின் கியுபெக் மாகாணத்தை தனி நாடாக பிரடகனம் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மொன்ட்ரியால் நகரின் மையப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நூற்றுக் கணக்கான மக்கள் வீதிகளில் பேரணியாக இறங்கி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த பேரணி, 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 அன்று நடைபெற்ற சுயாட்சிக் கருத்துக்கணிப்பின் 30 ஆம் ஆண்டு நினைவாக முன்னெடுக்கப்பட்டது. தற்பொழுது இளைஞர்கள் பெருமளவில் இந்த இயக்கத்தில் இணைந்து வருகிறார்கள்.

02

# மலேசியா உச்சிமாநாட்டில் அமெரிக்காவை மறைமுகமாக சாடினார் கனடா பிரதமர் கார்னி




அமெரிக்காவின் செயற்பாடுகளை கனடிய பிரதமர் மார்க் கார்னி மறைமுகமாக விமர்சனம் செய்துள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற தென் கிழக்காசிய நாடுகள் சங்க உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட கனடா பிரதமர் மார்க் கார்னி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் வர்த்தக கொள்கைகளுக்கு கார்னி மறைமுகமாக எதிர்வினை அளித்துள்ளார்.

“நாங்கள் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச முறைமையை மதிக்கிறோம். வர்த்தக ஒப்பந்தங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கிறோம். பொருட்கள், மூலதனம் மற்றும் சிந்தனைகளின் சுதந்திரப் பரிமாற்றத்தை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம்.” என தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துகள், அண்மையில் கனடாவுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து வந்ததாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக பேச்சுவார்த்தைகளை தொடர்வது கனடா அரசின் பிரதான பொறுப்பாகும். அதுவே சிறந்த வழிமுறையாகும் என கார்னி தெரிவித்துள்ளார்.

தற்போதைய உலகம் இருதரப்புச் சலுகை அடிப்படையிலான பரிமாற்ற முறை மற்றும் பெரும் சக்திகளின் போட்டி காலம் நோக்கி நகர்ந்து வருவதாகவும், இதனால் நம்பகமான கூட்டாளிகளின் அவசியம் அதிகரித்துள்ளதாகவும் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

நம்பகத்தன்மை கொண்ட நாடாக கனடா தன்னை நிரூபித்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடா அடுத்த பத்து ஆண்டுகளில் அமெரிக்கா தவிர்ந்த நாடுகளுக்கான ஏற்றுமதியை இரட்டிப்பாக்கவும், அடுத்த நான்கு ஆண்டுகளில் பாதுகாப்புச் செலவினங்களை நான்கு மடங்கு உயர்த்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது இணைய பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் முதலீட்டை அதிகரிக்கக் குறிவைத்துள்ளதாகவும் அவர் விளக்கியுள்ளார்.

# செயற்கை நுண்ணறிவு சட்டத்தில் புதிய மாற்றங்கள் செய்யும் கனடா

கனடாவில் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான சட்டத்தில் புதிய மாற்றங்கள் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் செயற்கை நுண்ணறிவு அமைச்சர் இவன் சாலமன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தனியுரிமைச் சட்ட மூலத்தில், செயற்கை நுண்ணறிவு சாட்பொட்ஸ் தொடர்பாக வயது வரம்பு விதிகள் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது என கூறியுள்ளார்.

இது குழந்தைகளை இணையத்தில் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எனவும் அவர் குறிப்பிட்டார்.



அத்துடன், டீப் ஃபேக் எனப்படும் போலி காட்சிகளை நீக்குவதற்கான உரிமையும் சட்டத்தில் சேர்க்கப்படும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவுக்கான பரந்தளவிலான கட்டுப்பாட்டு சட்டத்தை தற்போது ஆதரிக்கவில்லை என்றாலும், அவசரமான மற்றும் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவுக்கான புதிய ஏ.ஐ.கொள்கையை மேம்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிபுணர்கள் குழுவினரிடமிருந்தும், மற்றும் பொது மக்களிடமிருந்தும் கருத்துக்களை பெற்றுக் கொள்வதில் திறந்த மனப்பான்மையுடன் உள்ளதாகவும் கூறினார்.

இந்நிலையில், இதுவரை 6,500 இற்கும் மேற்பட்ட கனடியர்கள் மத்திய அரசின் ஆலோசனையில் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர் என அமைச்சர் சாலமன் தெரிவித்தார்.




## மீளப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

முந்தைய திருத்தப்பணிகளை போர்ஸே விற்பனை நிலையங்கள் செய்திருந்தாலும், அவை போதுமானதாக இல்லாமலிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், குறிப்பிட்ட சில வாகனங்களில் இரண்டாவது திருத்தப்பணி அவசியமாகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"சில வாகனங்களில் உயர்வோல்ட் மின்சார ஹீட்டர் செயலிழக்கலாம். இது நடந்தால், கேபின் உள்வெப்பம் குறையலாம் மற்றும் முன்கண்ணாடி உறை நீக்கும் அமைப்பு சரியாக இயங்காது," என்று அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

"முன்கண்ணாடி உறை நீக்கி இயங்காததால் பார்வை குறைந்து விபத்துக்கான அபாயம் அதிகரிக்கும்," என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மொடல்கள்:

- போர்ஷே டைகான் (Porsche Taycan) - 2020 முதல் 2024 வரை
- போர்ஷே டைகான் கிராஸ் டூரிஸ்மோ (Porsche Taycan Cross Turismo) - 2021 முதல் 2024 வரை
- போர்ஷே டைகான் கிராஸ் டூரிஸ்மோ டர்போ (Porsche Taycan Cross Turismo Turbo) - 2021 முதல் 2024 வரை
- போர்ஷே டைகான் டர்போ (Porsche Taycan Turbo) - 2020 முதல் 2024 வரை

Porsche நிறுவனம், பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு அஞ்சல் மூலம் அறிவித்துக், அவர்களின் வாகனங்களை அருகிலுள்ள விற்பனை நிலையத்துக்கு கொண்டு சென்று மின்சார ஹீட்டரை மேம்படுத்தப்பட்ட புதிய பகுதியால் மாற்றுமாறு அறிவுறுத்தியுள்ளது.

## கியுபெக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1995 இல் நடைபெற்ற கருத்துக்கணிப்பில் தனிநாட்டு கோரிக்கைக்கு எதிரானவர்கள் 50.58 வீத வாக்குகளால் மிகக் குறைந்த வித்தியாசத்தில் வென்றனர். இதற்கு முன்னர் 1980 இல் நடைபெற்ற முதல் கருத்துக்கணிப்பில் 40.44 வீதம் பேர் மட்டுமே சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

தற்போது பார்டி கெபெகொயிஸ் கட்சி கருத்துக்கணிப்பில் முன்னிலையில் இருந்து, 2030 இற்குள் மூன்றாவது கருத்துக்கணிப்பை நடத்தும் எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இது ஒரு குடிமக்கள் வழிநடத்தப்படும், கட்சி சார்பற்ற இயக்கம். இன்னும் சில ஆண்டுகளில் புதிய கருத்துக் கணிப்பை நடத்தும் அளவுக்கு இது பெரிதாக வளரும் என்று நம்புகிறேன் என கோயெட்-கிங்ராஸ் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்கள் பலரும் காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக சுயாட்சியைக் காண்கிறார்கள் என தெரிவித்துள்ளார். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், 1980 மற்றும் 1995 இல் நடந்த கருத்துக் கணிப்புகளில் பங்கேற்ற மூத்த தலைமுறையினருடன் சேர்ந்து நடைபயணத்தில் இணைந்தனர்.

சுயாட்சியை ஆதரிக்கும் கேபெக் சோலிடெயர் கட்சியின் உறுப்பினர்கள் மனோன் மாசே மற்றும் ரூபா கஜால் ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.



# ஜஸ்டின் ட்ரூடோவுடன் இணைந்தார் பொப் பாடகி

## சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரியும், கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் பாரிஸ் நகரில் பொதுவெளியில் ஒன்றாக தோன்றி சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

கனடா முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தனது 18 ஆண்டு கால திருமண வாழ்க்கைக்கு பிறகு, மனைவி சோஃபி கிரெகோயரை கடந்த 2023 ஆம் ஆண்டு பிரிந்தார். அதுபோல், பிரபல பொப் பாடகி கேட்டி பெர்ரி தனது காதலரும், நடிகருமான ஆர்லாண்டோ ப்ளூமை கடந்த ஜூலை மாதம் பிரிந்தார்.

இரு ஜோடிகளும் பிரிந்த பிறகு, கடந்த ஜூலை மாதம் கனடாவின் மாண்ட்ரீல் நகரில் கேட்டி பெர்ரியும், ஜஸ்டின் ட்ரூடோவும் தனியாக சந்தித்தபோது, அவர்கள் காதல் குறித்த செய்திகள் வெளியாகின.

அதை தொடர்ந்து, இந்த மாத தொடக்கத்தில் கலிபோர்னியாவின் சாண்டா பார்பரா கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு படகில் இருந்த புகைப்படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்நிலையில், அனைத்து வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, இந்த ஜோடி முதல் முறையாக பாரிஸ் நகரில் பொதுவெளியில் ஒன்றாக தோன்றியுள்ளது.

தனது 41 ஆவது பிறந்தநாளை கொண்டாடுவதற்காக பாரிஸ் சென்றிருந்த கேட்டி பெர்ரி, நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்தபோது, இருவரும் கைகோர்த்தபடி ஜோடியாக நடந்து வந்தனர்.

ஜஸ்டின் ட்ரூடோவின் குழந்தைகளும் கேட்டி பெர்ரியை அன்புடன் வரவேற்றுள்ளனர். இருவருக்கும் இடையே இயல்பான பிணைப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

